**கலவான பிரதேச சபை -2022**

---------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கலவான பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு தொடற்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கலவான பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு தரநியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றது எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டு மொத்தம் ரூபா 7,438,621வான சபைக்கு சொந்தமான வாகனம், நூலக புத்தகங்கள் மற்றும் கலி தொட்டி ஆகியவை கணக்கீடு செய்யப்படாதுள்ளதுடன் ஒரு வாகனம் மற்றும் வயிப்ரேடர் இயந்திரத்தின் கிரயம் ரூபா 1,100,000 குறைத்து கணக்கிடப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது திருத்தங்கள் செய்யப்படுமென. | கணக்குகளைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான உழவு இயந்திரம் மற்றும் துவிச் சக்கர வண்டி ஒன்றின் கிரயமான ரூபா 973,750 நிலையான சொத்துக்களின் கீழ் இருமுறை கணக்கிடப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டிற்கான இறுதி நிதிக் கூற்று தயாரிக்கும் போது சீர் செய்யப்படுமென. | இது சீர் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டுக்குரிய வாடகை பட்டியலிடல் ரூபா 450,950 அதிகமாகவும், ரூபா 327,812 குறைவாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்று தயாரிக்கும் போது சீர் செய்யப்படுமென. | உரிய பெறுமதிகள் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) | நன்கொடையாக பெறப்பட்ட ரூபா 950,000 பெறுமதியான பெல்லர் இயந்திரத்தின் மதிப்பு நிதி செயலாற்றல் அறிக்கையில் சீராக்கம் செய்யப்படவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாரான தவறுகள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | உரிய பெறுமதிகள் கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 06 கணக்கு விடயங்கள் 2022 டிசம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் படி மீதிகளுக்கு இடையே ரூபா 3,885,758 வேருபாடு காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீர் செய்யப்படுமென. | வேறுபாட்டிற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு தீர்க்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டு மொத்தம் ரூ.65,211,076ஆன 04 கணக்கு விடயங்களுக்காக விரிவான உப பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | முந்தைய ஆண்டுகளின் நிதிக் கூற்று மற்றும் உப பதிவேடுகள சரிபார்க்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக. | விரிவான உப பதிவேடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 முதல் 2019 வரையிலான காலப்பகுதிக்குரிய கூட்டு மொத்தம் ரூபா 17,167,333 ஆன காலாவதியான பல்வேறு வைப்புகள், நிதிப் பிரமாணம் 571 (2) இன் பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | மேலும் தேடிப்பார்த்து நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,106,350 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவினம் ரூபா 1,464,663 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவள்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022<br>மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2021<br>மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,192,877 | 3,289,245 | 2,930,594 | 3,633,626 | 3,221,675 | 3,375,755 | 3,809,715 | 3,389,244 |
| வாடகை | 9,941,213 | 10,396,796 | 8,169,855 | 12,593,822 | 14,132,656 | 8,321,796 | 4,856,903 | 9,971,521 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,541,790 | 7,731,571 | 7,731,571 | - | 529,120 | 1,204,755 | 1,204,755 | - |
| ஏனைய வருமானம் | 3,064,607 | 3,956,448 | 3,956,448 | - | 3,485,863 | 2,975,847 | 2,975,847 | - |
| | 18,740,487 | 25,374,060 | 22,788,468 | 16,227,448 | 21,369,314 | 15,878,153 | 12,847,220 | 13,360,765 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில், அடையாளம் காணப்பட்ட 04 அபிவிருத்தியடைந்த பகுதிகள் அறிவிக்கப்பட்டு, வீத வரி அறவிடப்பட்டிருக்க வில்லை. | அந்த பகுதிகளை அறிவிப்பதற்கான அங்கீகாரத்திற்காக ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | அபிவிருத்தியடைந்த பகுதிகள் அறிவிக்கப்பட்டு, வீத வரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி தினத்தில காணப்பட்ட ரூபா 1,812,305 ஆன நிலுவை வீத வரி மீதியினுள் 05 ஆண்டுகளுக்கும் மேலான பழைய ரூபா 840,568 மீதியொன்றும் காணப்பட்டது. | நிலுவை வீத வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை வருமானங்கள் தாமதமின்றி சேகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி தினத்தில் ரூபா 237,919ஆன நிலுவையில் உள்ள ஏக்கர் வரி மீதியினுள் 03 ஆண்டுகளுக்கும் மேலான பழைய ரூபா 228,212 மீதியொன்றும் காணப்பட்டது. | அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பெறுவனவுகள் இழிவடைந்திருந்ததுடன், வரி அறவிடுதல் மிகவும் கடினமானதென்பதாக. | நிலுவை வருமானங்கள் சேகரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி வரை, நிலுவை வாராந்த சந்தை கட்டணம் ரூபா 118,559 அறவிடப்பட்டிருக்க வில்லை. | குறித்த நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை வருமானங்கள் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 191 வார சந்தையின் கடையறைகளுக்கான முறையான மதிப்பீடு கிடைக்கும் வரை ரூபா 10,000 ஒரே தடவையில் அறவிட்டு 05 வருடங்களுக்காக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு பெற்றுக் | குறித்த ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திடுதல் இடம்பெற்று வருவதாக. | ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பதற்கு பொதுச்சபை தீர்மானித்திருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் கடையறைகள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | சுற்றுச்சூழல் அனுமதி பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்கள் தொடற்பாக கணக்கெடுப்பொன்று 2022 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிளே முறையாக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | வருடாந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு சுற்றுச்சூழல் அனுமதி பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். |
| (எ) | 2022 வருடாந்த கணக்கெடுப்பின் மூலம் இனங்காணப்பட்ட 132 அறிவிப்பு பதாகைகளுக்கான ரூபா 676,325 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டிலே முறையான கணக்கெடுப்பு கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | வருடாந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஏ) | 04 முச்சக்கர வண்டி சங்கங்களைச் சேர்ந்த 65 முச்சக்கர வண்டிகளிடமிருந்து ரூபா 111,000 பெறுமதியான கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | முச்சக்கரவண்டி சங்கங்களுக்கு நிலுவைத் தொகை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் நிலுவைத் தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.2 திண்மக் கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திண்மக் கழிவு மையமொன்று க்கான காணியொன்றை பெற்றுக்கொள்வதற்காக 2021 ஆம் ஆண்டு கலவானை பிரதேச செயலாளருக்கு ரூபா 50,000 செலுத்தப்பட்ட போதிலும், சுவீகரித்தல் நடவடிக்கைகள் நிறைவடையாதிருந்தது. மேலும், அழியாத கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்காக 2022 ஆகஸ்ட் மாதத்தில் மாகாண சபையிலிருந்து பெறப்பட்ட ரூபா 950,000 பெறுமதியான பெலர் இயந்திரம் 2023 ஜனவரி வரையிலும் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | சபையின் நிதி நிலைமை மேம்பட்ட பிறகு இந்த விடயங்கள் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக. | காணியை சுவீகரித்தல் மற்றும் மும்முனை மின்சாரம் வழங்களைப் பெற்று பெலர் இயந்திரத்தை உபயோகப் படுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருடாந்தம் 1620 மெற்றிக் டொன் அளவான கழிவை அகற்றுவதற்காக 05 ஊளியர்கள், 02 வாகனம் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக ரூபா 4,187,615 செலவிடப் பட்டிருந்த போதிலும், அந்த திண்மக் கழிவு சுற்றுச் சூழலுக்கு உகந்த வகையில் அகற்றப்பட்டிருக்க வில்லை. | கழிவு வகைப்படுத்தும் மத்திய நிலையமொன்றுக்காக பொருத்தமான காணியொன்று அவதானிக்கப்பட்டு வருவதாக. | முறையான திண்மக் கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2021 ஆம் ஆண்டு எடுத்துச்செல்லப் பட்டிருந்த உருளையை மீண்டும் ஒப்படைத்திருக்க வில்லை. அது சுமார் 08 மாதங்களாக வெத்தாகல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த போது அதன் 02 மின்கலங்கள் திருடப்பட்டமையினால் ரூபா 187,260 ஆன சேதத்தை மீள்நிரப்பப்பெற்றிருக்கவில்லை யென்பதுடன், அதிகார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 96,460 வான வாடகைக் கட்டணமும் 2022 டிசம்பர் வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | இயந்திரத்தை பழுது பார்ப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ரூபா 265,360 வான வாடகை பெறுமதியிலிருந்து ரூபா 168,900 பெறுமதி தற்போது ள்ளதாக. | நிலுவைத் வருமானத்தை அறவிடப்பட்டுக் கொள்வதற்கும், சேதத்தை மீள்நிரப்பிக்கொள்வதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஜூலை மாதத்தில் விபத்துக்குள்ளான கலி பவுசர் 2023 ஜனவரி வரையும் திருத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, கலி சேவையை வழங்க முடியாமல் வருமான ஆதாரமும் இழக்கப்பட்டிருந்தது. | கலி பவுசர் பழுதுபார்க்கும் பணி இறுதி கட்டத்தில் உள்ளதாக. | பழுதுபார்த்து சேவை வழங்குவதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (இ) | சட்டவிரோத கட்டுமானங்களை அடையாளம் காணுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று சபையிடம் காணப்படவில்லை. | சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பாக அறிக்கையை பெற்றுத்தருமாறு உரிய அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக. | சட்டவிரோத கட்டுமானங்கள் அடையாளம் காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மலக் கழிவுகளை அகற்றுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கியொன்றிற்காக | தொழில்துறையின் கட்டுமானப் பணிகள் மட்டுமே அபிவிருத்தி பிரிவின் ஊடாக | அனுமதி முறையாக பெறப்பட்டு கட்டுமான |

| | | |
|---|---|---|
| குக்குலேகம நீர்மின் நிலையத்தினால் அனுமதி வழங்காததால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 902,100 விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டதுடன், மலக் கழிவுகளை அகற்றும் பிரச்சினையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டதாக. | பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.5 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலைவருக்கு சபையின் அதிகார எல்லைக்கு வெளியே பயணிப்பதற்காக பெறுகை வழிகாட்டளுக்கு அப்பால் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த வாகனங்களுக்காக மீளாய்வாண்டில், 08 சந்தர்ப்பங்களில் ரூபா 502,118 செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவினுள் பெல்மடுல்ல மற்றும் தம்புள்ளை பிரதேசங்களில் இடம்பெற்ற அரசியல் கூட்டங்களுக்கு செல்வதற்காக, செலுத்தப்பட்ட ரூபா 75,405 வும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டளுக்கு இணங்க வாடகை வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கு நீண்ட காலம் ஆவதால், மாண்புமிகு தலைவரின் பணிகளுக்கான மாவட்ட விலைக்குழு அறிக்கையின்படி, தொழில் நுட்ப அதிகாரியின் பரிந்துரையின் பேரில் வாடகை வாகனங்களை பெற்றுக்கொள்வது இடம்பெற்றுள்ளதாக. | வாகனங்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்வது சபையின் கடமைகளுக்காக மற்றுமே மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமில்லாத 08 வாகனங்களை அதன் உரிமையை சபைக்கு உரித்தாக்கிக் கொள்ளவோ அல்லது திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | 02/2017 இன் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் அறிவுருத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.7 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொத்துப்பிட்டிய பாடசாலைக்கு அருகில் விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திப் பணிகள் ரூபா 1,474,413 வினால் | மண் பரப்பப்பட்டு, இயல்பு நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன், 95 சதவீத பணிகள் இதுவரை | விளையாட்டுப் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடியுமான வாறு |

| | | |
|---|---|---|
| முடிக்கப்பட்டு 2021 டிசம்பர் 13 திகதி வேலை முடிவுருத்தும் அறிக்கை பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2023 மார்ச் ஆன போதிலும் மழைநீர் உரியவாறு வடிந்தோடுவதற்கு ஏற்பாடு செய்யப்படாமை மற்றும் புற்கள் பரப்பும் வேலை நிறைவுச் செய்யப்படாமை காரணமாக விளையாட்டுப் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடியாதிருந்தது. | நிறைவடைந்துள்ள தாக. | விளையாட்டு மைதானப் பணிகள் முடிக்கப்பட வேண்டும். |